# ஆகஸ்ட்– 18 – சனி

புனித எலேனா

**உம் மீட்பின் மகிழ்ச்சயை மீண்டும் எனக்க அளித்தருளும்: திபா. 51:12**

## முதல் வாசகம்: ஏசேக்கியல்18: 1 – 10,13,30-32

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது."புளித்த திராட்சைப் பழங்களைப் பெற்றோர் தின்ன, பிள்ளைகளின் பல் கூசிற்றாம்" என்னும் பழமொழியை இஸ்ரயேல் நாட்டைக் குறித்து நீங்கள் வழங்குவதன் பொருள் என்ன? என்மேல் ஆணை! என்கிறார் தலைவராகிய ஆண்டவர். இப்பழமொழி இஸ்ரயேலில் உங்களிடையே வழங்கப்படாது.உயிர் அனைத்தும் எனக்கே சொந்தம். பெற்றோரின் உயிர் என்னுடையது. பிள்ளைகளின் உயிரும் என்னுடையதே. பாவம் செய்யும் உயிரே சாகும்.ஒருவன் நேர்மையாளனாய் இருந்து நீதியையும், நேர்மையையும் கடைப்பிடித்தால்,மலைகளின் மேல் உண்ணாமலும், இஸ்ரயேல் வீட்டாரின் சிலைகளை நோக்கித் தன் கண்களை ஏறெடுக்காமலும், பிறன் மனைவியைக் கறைப்படுத்தாமலும், தீட்டுள்ள பெண்ணை நெருங்காமலும் இருந்தால்,அடுத்திருப்பவனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருந்து, கடன் வாங்கியவனுக்கு அடைமானத்தைத் திருப்பிக் கொடுத்து, பசித்தவனுக்குத் தன் உணவைப் பகிர்ந்தளித்து, ஆடையின்றி இருப்பவனுக்கு ஆடை அணிவித்து இருந்தால்,வட்டிக்குக் கொடாமலும், கொடுத்ததற்கு அதிகமாய்ப் பெறாமலும் இருந்து, தன் கையால் அநீதி செய்யாது விலகி, மனிதரிடையே எழும் வழக்குகளுக்கு நீதியுடன் தீர்ப்பளித்தால், என்நியமங்களையும் நீதிநெறிகளையும் கடைப்பிடித்து, உண்மையுள்ளவனாக நடந்துகொண்டால், அவன் நீதிமான் ஆவான் அவன் வாழப்போவது உறுதி, என்கிறார் தலைவராகிய ஆண்டவர். ஆனால், அவனுக்குப் பிறந்த மகன் கட்டுக்கடங்காதவனாயும், இரத்தம் சிந்துபவனாகவும் முன் சொல்லியவற்றுள் ஒன்றைப் பிறருக்குச் செய்பவனாகவும் இருந்தால்,அவன் வாழமாட்டான். அருவருப்பான இவற்றையெல்லாம் அவன் செய்துள்ளதால் அவன் சாவது உறுதி. அவனது இரத்தப்பழி அவன் மேலேயே இருக்கும்.எனவே, இஸ்ரயேல் வீட்டாரே! ஒவ்வொரு மனிதரையும் அவருடைய வழிகளைக் கொண்டே நான் தீர்ப்பிடுவேன், என்கிறார் தலைவராகிய ஆண்டவர். மனம்மாறி உங்கள் குற்றங்கள் அனைத்தையும், விட்டுவிலகுங்கள். அப்போது தீமை உங்கள் வீழ்ச்சிக்குக் காரணமாய் இராது.எனக்கெதிராக நீங்கள் இழைத்த குற்றங்கள் அனைத்தையும் விட்டுவிடுங்கள். புதிய இதயத்தையும், புதிய மனத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். இஸ்ரயேல் வீட்டாரே! நீங்கள் ஏன் சாகவேண்டும்?எவருடைய சாவிலும் நான் இன்பம் காண்பதில்லை, என்கிறார் தலைவராகிய ஆண்டவர். எனவே மனம் மாறி வாழ்வு பெறுங்கள்.

**பதில்பாடல் :** கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்.

## நற்செய்தி : மத்தேயு 19 : 13 – 15

அக்காலத்தில் சிறுபிள்ளைகள் மேல் இயேசு தம் கைகளை வைத்து வேண்டுதல் செய்யுமாறு அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர். சீடரோ அவர்களை அதட்டினர். ஆனால் இயேசு, "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" என்றார். அவர்களைத் தொட்டு ஆசி வழங்கிய பின்பு அவர் அவ்விடத்தைவிட்டுச் சென்றார்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் கிறிஸ்தவன் கிறிஸ்தவள் என்ற உரிமைப் பேற்றை பெற்றுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் இறைவனைப ' பற்றி அறிவிக்க வேண்டும் என்ற பொறுப்பை வழங்கியிருக்கின்றது. ஆனால் நாங்கள் அதை சிந்தித்து செயற்படுவதில்லை. காரணம் நாங்கள் செய்து வரும் அசுத்தமான, அருவருப்பான செய்களே, அவ்வாறு செய்பவர்களை அறிந்து சிறுவர்களாக இருந்தாலும் சரி, பெரியவர்களாக இருந்தாலுமசரி கொடுக்கப்பட்ட பணியினை சரிவர செய்துமுடிக்க வேண்டியது ஒவ்வருடைய கடமையாகும். இவ்வாறு மற்றவர்களுக்குஅறிவுரை கூறும் பொழுது நாங்கள் எவ்வாறு வாழ்கிறோம் என்று சிந்தித்து பார்க்க வேண்டியவர்களாக உளளோம். ஏனென்றால் நாங்கள் அன்பு, தாழ்ச்சி கொண்டு வாழும் பொழுது தான் யாவும் முழுமைபெறும். நற்செய்தி வாசகத்திலும் கூட நாங்கள் சிறுவர்களாக மாறவேண்டும் நாங்கள் என்றும் சிறுவர்களைப் போன்று கள்ளங்கபடமற்றவர்களாக தூய்மையானவர்களாக வாழ்ந்தோமேயானால் எமது சொல், செயல், யாவும் இறைவனுக்கு உரியவையாகவும், அவருக்கு ஏற்புடையவையாகவும் இருக்கும். இன்று எம்மிடம் கேட்கப்படும் கேள்வி நாங்கள் எந்தநிலையில் இருக்கிறோம், எவ்வாறான நற்செயல்களில் ஈடுபடுகிறோம் என்று சிந்தித்து செயற்பட வேண்டியது எங்கள் கடமையாகும். எனவே யாவற்றையும் மனதில் வைத்துக்கொண்டு எமது வாழ்வை செவ்வழிப்படுத்த நற்பணிபுரிவோம்.